# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2404/33 - 2024 ඔක්තෝබර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.10.03

*2404/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### திருத்தப்பட்டவாறான *1988* ஆம் ஆண்டின் *30* ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

*திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 47(4) 47(11ஆ), மற்றும் 76ஓ இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.*

கலாநிதி. **பி. நந்தலால் வீரசிங்க,**<br>
ஆளுகைச் சபையின் தலைவரும்,<br>
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,<br>
கொழும்பு,<br>
*2024*, ஒற்றோபர் *01*.

**உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான வரையறைகள்**

திருத்தப்பட்டவாறான *1988* ஆம் ஆண்டின் *30* ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் *47(4)*, *47(11ஆ)* மற்றும் *76ஓ* இன் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியினால், இக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றவாறு தொடர்பான தரப்பினருக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியினாலும் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறித்துரைக்கப்படும்) வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பில் பின்வரும் வரையறைகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டிருக்கிறது.


1A - G 42802 — 24 (2024/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1.* *உரிமம்பெற்ற வங்கியொன்றின் தொடர்பான தரப்பினர்கள்*

*1.1* இக்கட்டளையின் நோக்கத்திற்காக பின்வரும் நபர்களைக்கொண்ட வகையினர்கள் "தொடர்பான தரப்பினர்கள்" எனக் கருதப்படுதல் வேண்டும்.

(அ) உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர்;
(ஆ) அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினர்கள்;
(இ) உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அல்லது பின்னர் கையேற்றுக்கொண்டிருக்கின்ற கணிசமான அக்கறை கொண்டுள்ள நிறுவனம்;
(ஈ) உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளரது நெருங்கிய உறவினரொருவர் கணிசமான அக்கறையினை கொண்டுள்ள நிறுவனம்;
(உ) உரிமம்பெற்ற வங்கியொன்றின் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு அல்லது முதன்மை நிறைவேற்று தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலரொருக்கு, அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்வசதிகள் தவிர்ந்த, வேறுஏதேனும் கடன்வசதிகள் தொடர்பானவைகள்;
(ஊ) தனிப்பட்ட ரீதியாக அல்லது நிறுவன ரீதியாக பொருண்மிய அக்கறையைக் கொண்டிருக்கும் உரிமம்பெற்ற வங்கியொன்றின் பங்குதாரர்;
(எ) உரிமம்பெற்ற வங்கியின் துணை அல்லது இணைக் கம்பனியொன்று;
(ஏ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கியொன்றின் தாய்வங்கி அல்லது துணை நிறுவனங்கள் நீங்கலாக, உரிமம்பெற்ற வங்கியின் துணை நிறுவனங்கள் உள்ளடங்கலாக, உடமைக் கம்பனி;
(ஐ) உரிமம்பெற்ற வங்கியினது துணைக் கம்பனியொன்றின் அல்லது இணைக் கம்பனியொன்றின் பணிப்பாளரொருவர்;
(ஒ) உரிமம்பெற்ற வங்கியின் உடமைக் கம்பனியொன்றின் அத்துடன் அதன் துணைக் கம்பனிகளின் பணிப்பாளரொருவர்;
(ஓ) மேலேயுள்ள கட்டளை 1.1(உ) மற்றும் (ஊ) இல் குறித்துரைக்கப்பட்ட நபரொருவரின் நெருங்கிய உறவினர்;
(ஔ) வங்கியின் பணிப்பாராக இருக்கின்ற அதேவேளை அவர் பணிப்பாளராக அல்லது பங்களராக இருக்கும் நிறுவனம்;
(க) உரிமம்பெற்ற வங்கியொன்றின் பொருள்மிய பங்குதாரர் கணிசமான அக்கறைகளைக் கொண்டுள்ள நிறுவனம்;
(ங) தனிப்பட்ட பொருண்மிய பங்குதாரரொருவரின் நெருங்கிய உறவினர் கணிசமான அக்கறைகளைக் கொண்டிருக்கும் நிறுவனம்.

*2.* *தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகள் தொடர்பில் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகள்*

*2.1* "உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்வசதிகளுக்கான அனுமதிக்கப்பட்ட பிணைகள்" தொடர்பில் 2024.10.01ஆந் திகதியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட பிணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டதாக, அத்தகைய வங்கிகளின் தொடர்பான தரப்பினர்களுக்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி பின்வரும் வரையறைகளுக்கு ஒப்புதலளித்திருக்கிறது:

(அ) மேலேயுள்ள கட்டளை 1.1இன் (அ), (ஆ), (உ), (ஊ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ)இல் குறித்துரைக்கப்பட்டவாறு தனிப்பட்டவர்களாக விளங்கும் தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகளைப் பொறுத்தவரை; இருபது மில்லியன் ரூபா வரை (ரூ.20,000,000/-).

(ஆ) மேலேயுள்ள கட்டளை 1.1இன் (இ), (ஈ), (ஊ), (எ), (ஏ), (க), (ங) இல் குறித்துரைக்கப்பட்டவாறான தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகளைப் பொறுத்தவரை; உரிமம்பெற்ற வங்கியின் அடுக்கு 1 மூலதனத்தின் 10 சதவீதம்.

(இ) மேலேயுள்ள கட்டளை 1.1இன் (ஔ)இல் குறித்துரைக்கப்பட்டவாறான கரிசனைகளைக் கொண்டிருக்கும் தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகளைப் பொறுத்தவரை; உரிமம்பெற்ற வங்கியின் அடுக்கு 1 மூலதனத்தின் 15 சதவீதம்

மேலேயுள்ள கட்டளை 2.1இன் (ஆ) மற்றும் (இ)இல் தரப்பட்டுள்ளவாறான அடுக்கு 1 மூலதனம் என்பது வெளிவாரி கணக்காய்வாளரினால் சான்றுபடுத்தப்பட்டு, முற்போர்ந்த நிதியியல் ஆண்டில் அல்லது உடனடியாக முற்போர்ந்த காலாண்டின் இறுதியிலுள்ளவாறு, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்காக பாசல் III இன்கீழ், மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகளுக்கமைய கணிப்பிடப்படும் மொத்த மூலதன விகிதத்தின் பிந்திய கணிப்பீட்டில் அறிக்கையிடப்பட்ட சீராக்கங்களுக்கு முன்னரான அடுக்கு 1 மூலதனம் எனக் கருதப்படுதல் வேண்டும். இக்கட்டளையின் நோக்காக, கணக்காய்வு சான்றிதழ் வழங்கப்பட்டதற்குப் பின்னர் இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய இழப்புக்கள் அடுக்கு 1 மூலதனத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) தனிப்பட்ட ஒருவருக்கு கொடுகடன் அட்டையினை வழங்குவதன் மூலம் வழங்கப்படும் கடன்வசதிகளைப் பொறுத்தவரை அத்தகைய கடன்வசதிகள் தொடர்பாக வங்கியின் மற்றைய வாடிக்கையாளர்களுக்குரிய அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டு மில்லியன் ரூபா (ரூ.2,000,000/-) வரை

2.2 மேலேயுள்ள கட்டளை 2.1இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உத்தேச வரையறைகளுக்கு மேலாக வழங்கப்பட்டுள்ள கடன்வசதிகளைப் பொறுத்தவரை "உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்வசதிகளுக்கான அனுமதிக்கப்பட்ட பிணைகள்" தொடர்பாக 2024.10.01 ஆம் திகதியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானத்தின் 2.1 (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)இல் குறித்துரைக்கப்பட்ட காசு அல்லது காசுக்கு அண்மித்ததான பிணை உறுதிகளாக ஒப்புதலளிக்கப்பட்ட பிணையங்கள் உரிமம்பெற்ற வங்கிகளினால் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3. இரத்துச்செய்தல்

3.1 2005 பெப்புருவரி 11 ஆம் திகதியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 47(4) ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டக் கட்டளை இரத்துச்செய்யப்படுகிறது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.